# உலக மறைத்தூதுப் பணி ஞாயிறு

## திருப்பலி முன்னுரை

'நீங்கள் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்' (திப 1:8) என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப, நாம் ஒவ்வொருவரும் நாம் பெற்றுக்கொண்ட திருமுழுக்கின் வழியாக, மறைத்தூதுப் பணியாளர்களாக வாழ அழைக்கப்படுகிறோம். திரு அவை என்பது மறைத்தூதுப் பணி ஆர்வமிக்கதாக தொடக்க முதல் இன்று வரை இருந்து வருகிறது. திரு அவையின் உறுப்பினர்களாகிய நாம், தனித்து அல்ல; மாறாக, சமூகமாக மேற்கொள்ள அழைக்கப்படுகிறோம். இருவர் இருவராக ஆண்டவர் இயேசு இன்றும் நம்மை அனுப்புகிறார். ஒவ்வொருவரும் நற்செய்திக்கும் உண்மைக்கும் திரு அவைக்கும் சான்று பகர்ந்து உலகிற்கு ஒளியாக, சாரமுள்ள உப்பாக விளங்க அழைக்கப்படுகிறோம். கிறிஸ்துவுக்கு சான்று பகர்வதும், மறு கிறிஸ்துவாக வாழ்வதும் கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொண்ட அன்பை பிறருடன் பகிர்ந்துகொள்வதும் திருஅவையை மூவாயிரமாவது ஆண்டில் அடியெடுத்து வைக்க உதவும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் வலியுறுத்துகிறார். தொடக்கக் கால கிறிஸ்தவர்களிடமிருந்த அதே மனநிலை, அதே தைரியம், சான்று பகரும் குணம், பற்றார்வமிக்க செயல்பாடு அனைத்தும் நமதாக வேண்டும். ஆண்டவரே, என்னை அனுப்பும் என்று ஆண்டவருக்காகப் புறப்பட்டுச் செல்லும் மனநிலை நம்மிடம் ஏற்பட வேண்டும்.

தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட நாம் அனைவரும், திருத்தூதுப் பணியின் அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து ஆழப்படுத்தி வளர்த்தெடுக்க வேண்டும். எல்லாருமே நற்செய்தியின் தூதுவர்களாக, மறைத்தூதுவர்களாக அனுப்பப்படுகிறோம். எண்ணிக்கை நூல் 11:29 அறிவுறுத்துவது போல நாம் இறைவாக்கினராகும்படி அழைக்கப்படுகிறோம். ஆகையால் இன்றைய நாளில் நம் பொறுப்பையும் கடமையையும் நன்கு உணர்ந்து, தாராளமாக நிதி பங்களிப்பு செய்வதோடு மட்டுமின்றி, அருள்வாழ்விலும் மேன்மேலும் வளர மறைத்தூதுப் பணி ஞாயிறு திருப்பலியில் மன்றாடுவோம். துன்புறும் பணியாளர்களாகக் களத்தில் மக்கள் பொருட்டுத் துன்புறும் அவர்களுக்குத் துணை நிற்போம். செபத்தால் அவர்களை ஊக்குவிப்போம். அவர்கள் கரங்களை வலுப்படுத்துவோம். அவர்கள் தேவைகளை நிறைவு செய்து பணி சிறக்க உதவுவோம்.

**முதல் வாசகம்: எசாயா 2: 1-5**

**திபா 98: 1. 2-3a. 3b-4. 5-6 (பல்லவி: 3b)**

**பல்லவி: உலகினர் அனைவரும் கடவுள் அருளிய விடுதலையைக் கண்டனர்.**

**இரண்டாம் வாசகம்: உரோமையர் 10: 9-18**

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி**

அல்லேலூயா, அல்லேலூயா! நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்: மாற்கு 16: 15-20**

உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்.

**நம்பிக்கையாளரின் மன்றாட்டுக்கள்**

**குரு:** 'தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்' (திப 1:8) என்று உயிர்த்த ஆண்டவரின் அழைப்பை ஏற்று நாம் கொண்டாடும் உலக மறைத்தூதுப் பணி தினத்தில், திருமுழுக்குப் பெற்றுள்ள நாம் அனை வரும், உலகின் கடையெல்லை வரை க்கும் நம் ஆண்டவருக்கு சாட்சிகளாக இருக்க நம் மன்றாட்டுகளை எடுத்துரைப்போம்.

**1. திரு அவைக்காக:** அன்புத் தந்தையே இறைவா! உமது மறைத்தூதுப் பணியாளராக அனுப்பப்பட்ட உம் ஒரே திருமகன் இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதியாக, அகில உலகத் திரு அவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், எம் உயர்/மறை மாவட்ட ஆயர் மேதகு.. (பெயர்), ஏனைய ஆயர்கள், மறைப்பணியாளர்கள், துறவியர் அனைவரும் தங்களின் இறையழைத்தலின் மேன்மையை உணர்ந்து, குன்றாத மறைத்தூதுப் பணியார்வத்துடன், திரு அவை வளம் பெறவும், வளர்ச்சிப் பெறவும், உழைக்கவும், உமது பேரன்பின் நம்பிக்கைக்குரிய சாட்சிகளாக கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் வழிநடக்கவும் எம்மை வழிநடத்தவும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**2. மரித்த மறைத்தூதுப் பணியாளர்களுக்காக:** இறை வாக்கினர்களை ஏற்படுத்திய இறைவா! எம் தாய்த்திருநாட்டிற்கு தொலை தூர நாடுகளிலிருந்து வந்து, எம் மொழிகளைக் கற்று, பண்பாட்டை உள்வாங்கி, உம் தூதர்களாக பணியாற்றி, கிறிஸ்தவ மறையைப் பரப்பி, இன்னுயிர் ஈந்த அயலக மறைத்தூதுப் பணியாளர்களுக்காக உமக்கு நன்றி சொல்கின்றோம். உமது விண்ணரசிற்கு வந்திருக்கும் உம் மறைபரப்பு பணியாளர்களின் ஆன்மாக்களை தயவுடன் ஏற்று, இவர்கள்தம் ஆன்மாக்கள், உமது திருமகன் இயேசு கிறிஸ்துவை முகமுகமாக தரிசித்து, உம்மில் இளைப்பாறவும், அவர்கள் எங்களுக்காக பரிந்து பேசவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**3. பணியாற்றும் மறைத்தூதுப் பணியாளர்களுக்காக:** இருக்கின்றவராக எம்மோடு என்றும் வாழ்பவரே இறைவா! உலகின் கடையெல்லை வரைக்கும் சென்று நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என்று உம் திருமகன் இயேசுவின் அழைப்பை ஏற்று, அனைத்தையும் துறந்து, மறைத்தூதுப் பணியில் பேரார்வம் கொண்டு, தங்களின் சொந்த நாட்டையும் மண்ணையும் விட்டுவிட்டு, அயல்நாடுகளில் மறைத்தூதுப் பணியாற்றும் மறைத்தூதுப் பணியாளர்கள் அனைவருக்கும் உடல் மற்றும் ஆன்ம நலத்தைக் கொடுத்து, அவர்கள் அனைவரும் குன்றாத ஆர்வத்துடன் நற்செய்தி அறிவிப்புப் பணியை மேற்கொள்ளவும் இறை மக்களின் வாழ்வில் ஒளியேற்றவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**4. இத்திருப்பலிக் கொண்டாட்டத்தில் பங்கேற்கும் நம் அனைவருக்காக:** நல்லாயனே இறைவா! உமது அன்பையும், இரக்கத்தையும், கருணையையும் எங்களுக்கு அனுபவிக்க உதவிபுரியும். எங்கள் நம்பிக்கையை ஆழப்படுத்தும்; நாங்கள் புரிகின்ற சின்னஞ் சிறிய செயல்களிலும், பேச்சிலும் உம்மைப் பறைசாற்றவும் எமக்கு உதவும். சிறப்பாக வாழ்வின் இருள் சூழ்ந்துள்ள இடங்களில் உமது ஒளியைத் தாங்குபவர்களாக எம்மை மாற்றிட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5. புலம்பெயர்ந்தவர்களுக்காக:** இரக்கமுள்ள தந்தையே இறைவா! போர், வன்முறை, வறுமை, வேலை வாய்ப்பின்மை, மதவாதிகளின் துன்புறுத்தல்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக புலம்பெயரும் மக்கள், ஏதிலிகள் அனைவருக்கும் நீர் தாமே அடைக்கலமாகவும் ஆறுதலாகவும் இருந்து, அவர்கள் நல்ல நம்பிக்கைக்குரிய எதிர்காலத்தை புலம்பெயரும் நாடுகளில் கண்டடையவும், உலகில் போர், வன்முறை, வகுப்புவாதம், மதவாதம் உள்ளிட்ட தீமைகள் அனைத்தும் முடிவுக்கு வந்து, சமத்துவமும் சகோதரத்துவமும் மனிதநேயமும் வளர்ந்திட வரமருள இறைவா, உம்மை மன்றாடுகிறோம்.

**குரு:** நமது தனிப்பட்ட தேவைகளுக்காக மௌனமாக மன்றாடுவோம்!

**மன்றாடுவோமாக:** எல்லாம் வல்ல தந்தையே இறைவா, ஆண்டவரின் மக்களாகிய அனைவருமே இறைவாக்கினராகும்படி (எண் 11:29) எம் அனைவரையும் திருமுழுக்கு வழியாகவும் ஏனைய அருளடையாளங்கள் வழியாகவும் ஏற்படுத்தியிருக்கிறீர். நாங்கள் அனைவரும் உம் திருமகன் இயேசு கிறிஸ்துவால் அனுப்பப்பட்டவர்களாக திருத்தூதர்களாக விளங்குகிறோம். ஒவ்வொரு திருப்பலிக்குப் பிறகும் நீர் எங்களை மறைத்தூதுப் பணியாளர்களாக அனுப்பிவைக்கிறீர். இவற்றையெல்லம் உணர்ந்து, நாங்கள் சிறந்த மறைத்தூதுப் பணியாளர்களாக விளங்க வரமருள எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.